724

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
ஸ்ரீஞானசம்பந்த குருப்யோ நம:

திருப்போரூர்
ஸ்ரீ சிவமுருகக் கடவுளின்

# தியானப்பணிமணி.

இஃது
சென்னை நுங்கம்பாக்கத்தையடுத்த பொன்னுநகரின்கண்
1897 ௵த்தில், அருட்கவி-கி. ஊ. பா. கங்காதர நாவலராம்
ஸ்ரீமத் - சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்
ஸ்தாபித்து நடாத்திவரும்,
"ஸ்ரீ சிவசுப்ரமண்ய தியான பஜனைத்"
திருக்கூட்டத்தாரவர்கள்
கேட்டுக்கொண்டவண்ணம்

தேசிக சுவாமிகளா லியற்றித் தமது
சென்னை சேத்துப்பேட்டை,
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச அச்சுக்கூடத்தில்
முத்திரித்து

கலியுகாப்தம் 5020க்குச் சரியான
தமிழ் சித்தார்த்தி ௵ மாசி ௴ 14௳ குருவாரம் இருத்திகையன்று
திருப்போரூர் சுவாமி சந்நிதானத்தில்
ஷை பஜனைத் திருக்கூட்டத்தாரால்
அரங்கேற்றஞ்செய்யப்பெற்றது.
1920 ௵ பெப்ரவரி ௴ 26௳
Registered Copy-right.
—[§]—

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞான சம்பந்த குருப்யோ நம

திருப்போரூர்

ஸ்ரீ சிவமுருகக்கடவுளின்

# தியானப்பணிமணி.

இஃது

சென்னை நுங்கம்பாக்கத்தையடுத்த பொன்னுநகரின்கண்
1897 ௵த்தில், அருட்கவி கி. ஊ. பா. கங்காதர நாவலராம்
ஸ்ரீமத் – சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்
ஸ்தாபித்து நடாத்திவரும்,
“ஸ்ரீ சிவசுப்ரமண்ய தியானபஜனைத்”
திருக்கூட்டத்தாரவர்கள்
கேட்டுக்கொண்டவண்ணம்

§

தேசிக சுவாமிகளா லியற்றித் தமது
சென்னை சேத்துப்பேட்டு
ஸ்ரீ ஜெயவிநாயக சிவப்ரகாச அச்சுக்கூடத்தில்
முத்திரித்து

கலியுகாப்தம் 5020 க்குச் சரியான
தமிழ் சித்தார்த்தி ௵ மாசி ௴ 14௨ குருவாரம் கிருத்திகையன்று
திருப்போரூர் சுவாமி சன்னிதானத்தில்
ஷை பஜனைத் திருக்கூட்டத்தால்
அரங்கேற்றஞ்செய்யப்பெற்றது.

1920 ௵ பெப்ரவரி ௴ 26௨.

Registered Copy-right.

[§]

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞான சம்பந்த குருப்யோ நம:

583
294.551
118421

திருப்போரூர்

ஸ்ரீ முருகக்கடவுளின்

# தியானப்பணிமணி.

## விநாயகர் வணக்கம்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஆதிபரா பாஞ்சடரா யனைத்துமான
வப்பரமாஞ் சிவபெருமா னதிதஞானச்
சோதியே யாறுதாரச் சுழுச்சி தானே
சுயம்புவாஞ் சுப்ரதீப சுப்ரமண்யர்
திதிலறு முகங்கலைபன் னிரண்டு தோளாய்த்
திருப்போரூர் வளர்முருகக் கடவு டோத்திரம்
மேதினிக்கு மூலமாய் வேம்படியில் மன்னும்
விநாயகனின் றுளேத்தி விளம்பி வாழ்வாம்.

## நூல்.

## முருகர் ஷட்டகமாலை.

பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

திருமுருகா வொருமுருகா தேவர்கட் சேனாதிபதி
திவ்யவறு முகவோம்முருகா
தினகரோ தயமுருகா நிம்புரி வசுரர்களைச்
செருத்தமஹா நிரமுருகா
அருமுருகா சிவபிரா னந்தக்கர ணத்தில்வந்த
வனலதி லுதித்தமுருகா
ஆனந்த மானபர மானந்த சித்தமதி
லசைந்தாடு ஞானமுருகா

உருமுருகா வுமைமுருகா வோங்கார முருகாமெய்
யுயரன்பர்க் குகந்தமுருகா
ஒப்புயர் விலாமுருகா வுள்ளமதை யுள்ளபடி
யுணர்ந்தருட் செய்யுமுருகா
பெருமுருகா கருணைமறைப் பேசுமுருகா வெல்லாப்
பிழைபொறுத் தாளுமுருகா
பேதையர்கள் வாதையற நாதனேகண் பார்ப்போரூர்
பிரணவமுரு கக்கடவுளே. (க)

சீரணியு மயமுருகா செங்கதிர்வேற் கரமேந்து
ஜெயஜெயா னந்தமுருகா
திகழார்ந்த வருமுருகா மாதவத்தா லுண்மைச்
செய்யதவ மருளுமுருகா
பாரணியு நயமுருகா பரமவபி தரனம்குப்
பாஸ்கரா ஹரவோம்முருகா
பத்தருடன் முத்தர்கட் சித்தர்கண மியாவினுட்
பரவிநடம் புரியுமுருகா
நேரணியு முயர்முருகா நித்தியாப ரோட்சநெறி
நிலவவரும் பரமமுருகா
நிகரொருவ ரின்றிபல வுருக்கொண்டு வந்தாளு
நிமலகுண நேமமுருகா
பேரணியு மதிமுருகா துதிமுருகா கிதிமுருகா
பீடுமறைப் பாடுமுருகா
பேதையர்கள் வாதையற நாதனேகண் பார்ப்போரூர்
பிரணவமுரு கக்கடவுளே. (உ)

திங்களென வொளிர்முருகா தேடரிய குண்டலியு
டெரிசிக்கு ஞானமுருகா
சித்தத்தின் பிரமையாற் செழும்பதக் காட்சியது
சேராத தூரமுருகா
மங்களா கரமிலகு மௌனநிதி பெட்டியுண்
மறைந்துளச் செல்வமுருகா
மதமாறு வுருகொண்டு வந்தமுருகா தொண்டர்
வளரன்பு செய்யுமுருகா
எங்குமுருகா வரந் தங்குமுருகா சருவ
யேகவை போகமுருகா

யெந்தையென சொந்தம் பாராட்டிதொழு மைந்த
ளிடர்களைத் துடைத்தாள்முருகா
பிங்கலைச் சுழுமுனை யிவைமுதலா யுளயோக
பீடத்தமர்ந்த முருகா
பேதையர்களை வாதையற நாதனேகண் பார்ப்போரூர்
பிரணவமுரு கக்கடவுளே. (௩)

ஆதிமுருகா பரம் நீதி முருகா வோம்ஹர
ஹரசிவா னந்தமுருகா
அத்தனென வுத்தமர்கட் சித்தமதி லொத்துதவ
மருளுதவி யாளுமுருகா
சோதிமுருகா மந்த்ர சூக்ஷமுருகா ஞானச்
சுத்தசை தன்யமுருகா
சுந்த்ரமுருகா பல தந்த்ராமுருகா கோடி
சூர்யப்ர காசமுருகா
போதிமுருகா வுண்மைப் போதமுருகா யெல்லா
பூதத்து னின்றமுருகா
பொய்யுளறி லழியாது மெய்யருள சம்பந்தப்
புண்ணியவுருக் கொண்டமுருகா
பேதமுருகா சரு வபேதமுருகா தொழும்பர்ப்
பேரம்விச வாசமுருகா
பேதையர்கண் வாதையற நாதனேகண் பார்ப்போரூர்
பிரணவமுரு கக்கடவுளே. (௪)

வாசிமுருகா யீச னேசமுருகா கலையின்
மயமான திவ்யமுருகா
மங்கைய ரெனுமாய வனுபூதி யிருவரை
மணங்கொண்டு மன்னுமுருகா
பாசமுருகா மன வாசமுருகா கருணைப்
பாவிக்குந் தெய்வமுருகா
பற்றற்று நின்றவரைச் சுற்றமாகக் கொண்டெட்
பரவிசுகங் காணுமுருகா
ஆசைமுருகா வினையி னசமுருகா வறியா
ரலைந்தோடி தேடுமுருகா
அமரர்த்தொழு திடவருளி யானந்த நிர்த்தஞ்செ
யண்ணலென வாளுமுருகா

பேசுமுருகா வுள்ளே பூசுமுருகாப் பேசின்
பேசாதப் பெருமைமுருகா
பேதையர்கண் வாதையற நாதனே கண் பார்ப்போரூர்
பிராணவழுந கக்கடவுளே (௫)

சிறந்தமுருகா வருட் சாந்தமுருகா வெல்லோர்
சிந்தையில்வா ழெந்தைமுருகா
தேவியுமைப் பார்வதி யெடுத்து கந்தாவெனச்
சீரிட்டழைத்த முருகா
பறந்தமதி யாளர்ப்பண் பாடும்முருகா கருணை
பாலிக்கும் பரமமுருகா
பணிதிகழ சரஹண பவானந்த வெனவோதில்
பாவம்பொடி யாக்குமுருகா.
மறந்தழைத் தவர்க்காறு மாயமருகா ஷைவ
மறைகளுரை யிறைவமுருகா
மாற்றிலுயர்த் தங்கமே வாழாரை வாழ்விக்கு
மாசிலா ஞானமுருகா
பிறந்தசன னக்கூற்றைத் தீர்க்குமுருகா மகிமைப்
பிறங்குஞ்சண் முகவோம்முருகா
பேதையர்கண் வாதையற நாதனேகண் பார்ப்போரூர்
பிராணவழுந கக்கடவுளே. (௬)

## கீர்த்தனை.

இராகம் - தண்டகம். ஆதிதாளம்.

திபதைகள்.

(௧) சரஹண லோலா - சங்கரிப் பாலா
சண்முக வேலா - தமியனை யாளாய்
சாமி நீ-நின்னடிக் காமி நான் முருகா; (சரஹண)

(௨) சுந்தர சீலா - சுகானந்த மூலா
யெந்தையே நூலா - யேகனேத்யாலா
ஈசனே போரூர்-வாசனே முருகா; (சரஹண)

(௩) கந்தனே வாராய்-கடைக்கண்ணால் பாராய்
சிந்தைநோய்த் தீராய்-திருவருள் தாராய்
தேடிலேன் றுதிப்-பாடிலேன் முருகா; (சரஹண)

(௪) வள்ளி மணாளா - வந்தாட் குணாளா
புள்ளி மயூரமேன் - புகழ்மன்னு மேலா
பூசுரா-தேவர்க ளீசா முருகா; (சரஹண)

(௫) தெய்வானை மோகா - திகழ்மறை யோகா
மெய்வளர் போகா - விதிதீர்க்கும் வாகா
வித்தகா-நல்லோர்-சித்தம் வாழ்முருகா; (சரஹண)

(௬) பாவிநானையா-கூவினேன் பொய்யா
தாவினேன் மெய்யா - தகைபன்னிரு கைய
தஞ்சமா யுனைக்-கெஞ்சினேன் முருகா; (சரஹண)

(௭) வருந்தினப் பேர்க்கு - வல்வினைப் போக்கும்
குருமொழி சேர்க்குங்-குணத்தோடாளாக்கும்
கொற்றவா சிவ - நற்றவ முருகா; (சரஹண)

(௮) சாதனை நீயே - சருவ் வுபாயே
வாதை தீர்ப்பாயே - வரமருள்வாயே
வல்லவி - யுமை செல்வனே முருகா; (சரஹண)

(௯) காரணப்பொருளே - கலைக்கெழிற் றெருளே
பாருயர் மருளே - பற்றற வருளே
பாசம் போக்கிட - நேசம்வை முருகா; (சரஹண).

(௧௦) உன்னை யல்லாது - வொருதுணை யேது
என்மேலென் வாது - யென்றுந் தகாது
எம்பரா சதா - நம்பினேன் முருகா; (சரஹண)

(௧௧) பொல்லாத நெஞ்சம்-போற்றிடா வஞ்சம்
செல்வமே பஞ்சங்-தீயமென் றஞ்சும்
செடிகளைப் பொடி - நொடியிற்செய் முருகா; (சர)

(௧௨) கருணையின் மொழியே - கடந்தாற் பழியே
வருகுமுன் விழியே - வைத்தாள்சீர் வழியே
மற்றும் பற்றிலை-கற்றோர் சொல்முருகா (சரஹண)

(௧௩) தொண்டரைச் சேர-துதிதினங்கூற
அண்டும் வினை தீர-யகற்று முடீகார
அண்ணலே பூசைப் - பண்ணிலேன் முருகா; (சர)

(௧௪) ஊரெலா மோடி - யுரைத்தேன்பண் கோடி
சீரையே நாடி - திரிந்தேனியான் வாடி
தெரியுமே சம்பந்த-குரவனே முருகா; (சரஹண)

(கரு) அண்டர்கள் தோத்ர - வருளுஞ்சற் பாத்திர
அசுரர்மேல் காத்ரா - அகண்டித நேத்ரா
ஆறுமுகனே நற் - பேருயர் முருகா; (சரஹண)

(கசா) தத்துவ முடிவே - சண்மத வடிவே
இத்தரை யிடியே - யேகச்செய் யடியேன்
யேழையல்லவோ - மாமயூரர் முருகா; (சரஹண)

(கஎ) பாபத்திற் பிழைத்தேன் - பத்தரைப் பழித்தேன்
கோபத்திற் பழுத்தேன் - கூற்றன்போல் விழித்தேன்
கோலமா மரணப் - பாலமா முருகா; (சரஹண)

(கஅ) பிறந்ததே கோரம் - பெருமப சாரம்
துறந்திடு தீரந் - துணைச்செ யுபகாரம்
சொல்லயா - நான்வல்லே - னல்லவே முருகா; (சர)

(கக) என்றும் விசார - மிதுவே ஆசாரம்
கன்மன தீரம் - காட்டுதே யாரம்
கார்ப்பையோ வினைபாற் - சேர்ப்பையோ முருகா; ()

(உ0) கள்ளவில் வாசம் - கனவுபவாசம்
உள்ளுபதேச - முரைத்தாலோ மோசம்
ஓகோவோ யிது - போகமோ முருகா; (சரஹண)

(உக) சுழுச்சியி லோங்கி - தூக்காமற் றூங்கி
பழிவழி நீங்கி - பன்னிருப் பாங்கில்
படுப்பனோ மயலை - விடுப்பனோ முருகா; (சரஹண)

(உஉ) ஏழைநான் சாமி - யெவர்த்துணை நேமி
கோழையால் நாமி - குறையுண்ட பூமி
கூத்தல்லோ மூச்சு - காற்றல்லோ முருகா (சரஹண)

(உ௩) நோய்க்கொண்ட தேகம் - நவநுமுன் சாகும்
சாய்ந்ததெல்லாம் போகும் - சணத்தில் மண்ணாகும்
தாமத மேது - சரணந்தா முருகா; (சரஹண)

(உச) மெய்யறிந்தாலே - விதிபோம் பூமேலே
ஐந்து மோய்ந்தாலே - அழியாதோர்க்காலே
ஆரணை மூன்றப் - பூரண முருகா; (சரஹண)

(உரு) பத்தர்கட் போற்ற - பணிமாலைச் சாற்ற
சித்தங்கொண் டேத்த - திருவருளேற்ற
சிற்பராவருள் - தற்பரா முருகா; (சரஹண)

(உசு) சிவப்பிரகாச - தேசிக னுபாச
தவத்துயர் வாச - சண்முக விலாச
சாத்திரா யீராறு-நேத்திர முருகா; (சரஹண)

—§—

## போற்றித் தேவாரம்.

கந்தனே போற்றி போற்றிக் கடம்பனே போற்றி ஞானச்
சுந்தரா போற்றி போற்றித் தூயனே போற்றி வேதத்
தந்தமே போற்றி போற்றி அறுமுகா போற்றி போரு
ரெந்தையே போற்றிமுரு கேசனே திருத்தாட் போற்றி. (க)

வாகனே போற்றி போற்றி வரமருட் போற்றி சர்வ
போகனே போற்றி போற்றிப் புனிதனே போற்றி சூக்ம
தேகனே போற்றி போற்றிச் சிவசிவ போற்றி போரு
ரேகனே போற்றிமுரு கேசனே திருத்தாட் போற்றி. (உ)

## வாழி விருத்தம்.

கஜமுகா னந்தவிநா யகனுமண்ணல்
கங்கைய னுமாதேவி போரூரீசன்
நிஜசத்வ மங்கையர்கள் மயிலும் வேலு
நிகரிலாத் திருநீறு ருத்திராக்கம்
விஜயமென வொளிதிகழ வந்த சைவ
வேந்தரன்பர் சிவசுப்ர மண்ய தியான
பஜனையநு மெய்ப்பாடும் புலவ ரிந்நாற்
பணிதிகழ வெஞ்ஞான்றும் வாழி நாளே.

—✳—

திருப்போரூர், ஸ்ரீ முருகக்கடவுளின், தியானப்பணிமணி.
முற்றுப்பெற்றது.

ஷெ. பஜனையின் ஸ்தாபகர்கள்.

கி. பா. முருகேசம் பிள்ளை
மு. ஆ விஜயராகவலு பிள்ளை
இரா. பொன்னுசாமி பிள்ளை
அ. குழந்தைவேலு பிள்ளை
T. ஆதிமூலம் பிள்ளை
கி. பா. சிங்காரம் பிள்ளை
C. S. கோபால் பிள்ளை

பஜனைக் காரணத்தலைவர். T. M. முனிசாமி பிள்ளை